

முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க சுதந்திர போராட்ட வீரர் தியாகி மாவீரன் பொல்லான் அவர்களின் 256 வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருமான சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் அலங்கரித்து வைக்கப்பட்ட பொல்லானின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஆதி தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் கழக நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், குறிஞ்சி என்.சிவக்குமார், வீரமணி கே.குமார் முருகேஷ் ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, ப.க.பழனிசாமி, மு.சுப்பிரமணியம், டி.எஸ்.குமாரசாமி, சென்னிமலை பி.செங்கோட்டையன், வில்லரசம்பட்டி முருகேஷ், நெடுமாறன், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜவகர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நவமணி, பொல்லான் பேரவை தலைவர் வடிவேல் ராமன் உள்ளிட்ட அனைத்து அருந்ததியினர் கூட்டமைப்பு நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், செம்மிபாளையம் ஊராட்சி, சாமிகவுண்டன் பாளையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், கனிமம் மற்றும் சுரங்கம் நிதி, சமூக பங்களிப்பு நிதி, குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.96.09 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி கட்டடத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், பல்லடம் நகர செயலாளர் நா.ராஜேந்திரகுமார், மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், வட்டாட்சியர் ஜீவா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பானுபிரியா, கனகராஜ், செம்மிபாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் வியா புண்ணியமூர்த்தி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஜெர்மனி நிறுவனம் – செய்யாறு சிப்காட்டில்

# ரூ.600 கோடியில் தொழிற்சாலை விரிவாக்கம்!

## 1000 பேருக்கு வேலைவாய்ப்பு!

செய்யாறு, டிச.30-

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிப்காட்டில் செயல்பட்டு வரும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஸ்விங் ஸ்டெட்டர் நிறுவனம் 600 கோடி ரூபாய் முதலீட்டில் தனது தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய உள்ளது. இதன் மூலம் சுமார் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

ஜெர்மனியின் மெம்மின்ஜென் நகரை தலைமையிடமாகக் கொண்டு ஸ்விங் ஸ்டெட்டர் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. கட்டுமானத்திற்கு தேவையான கான்கிரீட் கலவை இயந்திரங்கள், கான்கிரீட் பம்ப், லாரி மிக்சர்கள், மறுசுழற்சி ஆலைகளுக்கான கருவிகள் உள்ளிட்டவற்றின் முன்னணி உற்பத்தி நிறுவனமாக ஸ்விங் ஸ்டெட்டர் உள்ளது. இந்நிறுவனத்தின் தொழிற்சாலை தற்போது, திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிப்காட்டில் இயங்கி வருகிறது.

இந்நிலையில், தனது சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை இந்நிறுவனம் தீவிரப்படுத்தி உள்ளது. இதன் ஒரு பகுதியாக, செய்யாறு சிப்காட்டில் தொழிற்பேட்டையில் 52 ஏக்கர் நிலத்தை ஸ்விங் ஸ்டெட்டர் நிறுவனம் பெற்றுள்ளது. இதில், 2 லட்சத்து 47 ஆயிரம் சதுர அடியில் 600 கோடி ரூபாய் மதிப்பிலான விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஆயிரம் பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் ஸ்விங் ஸ்டெட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

### குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வெள்ளி விழா!

## மீனவர் அணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, டிச. 31 -

“குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில் பங்கேற்க வருகை தரும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்க மீனவர் அணியினர் அலைகடலெனத் திரண்டு வரவேற்க வாரீர்” என்று கழக மீனவர் அணி செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து கழக மீனவரணிச் செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் முப்பால் தந்த வள்ளுவப் பெருந்தகையின் வானுயர் சிலையை நிறுவிட வேண்டும் என்ற பெருங்கனவை, நனவாக்கிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டு 133 அடியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் திருவள்ளுவர் சிலையின் 25 வருட வெள்ளி விழா ஆண்டு ஆழிப் பேரலையின் இயற்கை சீற்றங்கள் உலகப் பொதுமறை தந்த வள்ளுவப் பெருந்தகையின் சிலை மீது நாள்தோறும் மோதி விளையாடும் கடல் அலையின் சீற்றத்துடன் ஓயாது வீசும் உப்புக் காற்றால் பேரறிவுச் சிலை அமைந்தது முதல் கழக ஆட்சி பொறுப்பேற்கும் காலங்களிலெல்லாம் அய்யன் வள்ளுவனின் சிலையை கவனமுடன் பராமரித்து, ரசாயணப் பூச்சு செய்து வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தாயின் பரிவுடன் இன்றளவும் சிலையை பாது காத்து வரும் திராவிட மாடல் அரசின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு தந்து தாய்மொழி தமிழுக்கு புகழ் மாலை சூட்டிய ஐயன் வள்ளுவப் பெருந்தகைக்கு முக்கடலும் சங்கமிக்கும் குமரி முனையில் வானுயர சிலை காண வேண்டும் என 1975 ஆண்டில் திட்டமிட்டு 1990 களில் அரசாணை பிறப்பித்து, 2000 ஆம் ஆண்டில் 133 அடி உயரத்தில் தெற்கில் ஒரு இமயமாக தமிழின் சிகரத்தில் உயர்ந்து நிற்கும் அய்யன் வள்ளுவரின் வானுயரச் சிலையை திறந்து வைத்த முத்தமிழ் காவலர் உலகச் செம்மொழி மாநாடு நடத்திய நம் உயர்நிகர் தலைவர் கலைஞர் வழியில் தமிழின் அடையாளமாக உயர்ந்து நிற்கும் ஐயன் வள்ளுவர் சிலையை உலகத் தமிழர்களும் இந்திய தேசத்தின் அனைத்து மக்களும் மிக அருகில் சென்று கண்டு களிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலமைச்சர் கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயரிய தொழில்நுட்பத்துடன் கவின்மிகு அழகுடன், உருவாக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை பாலத்தின் திறப்பு விழாவில் பொது மக்களோடு, கழக மீனவரணியினர் குடும்பமாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கல்வி வாசிப்பை – பதிப்புப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில்

# பதிவுப் புத்தக அஞ்சல் சேவையை செயல்பாட்டிற்கு கொண்டு வருக!

## ஒன்றிய அமைச்சருக்கு பி.வில்சன் எம்.பி. வேண்டுகோள்!



சென்னை, டிச. 31-

கல்வியையும் வாசிப்பையும் பதிப்புப் பணியையும் ஊக்குவிக்கும் வகையில் இயங்கிக் கொண்டிருந்த பதிவுப் புத்தகத் தபால் (Registered Book Post) சேவையை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தனது X சமூக வலை தளம் வாயிலாக ஒன்றிய அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பி.வில்சன் தன்னுடைய பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது..

ஒன்றிய அமைச்சர் அவர்கள், டிசம்பர் 6, 2024 அன்று, தபால் துறையின் நவீனமயமாக்கல் குறித்த நாடாளுமன்றத் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இருப்பினும், இந்திய தபால் துறையின் மிகவும் மதிப்புமிக்க சேவைகளில் ஒன்றான பதிவு புத்தக தபால் சேவையை நிறுத்துவதற்காக முன்மொழியப்பட்ட முடிவு குறித்து அமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை.

இந்தியத் தபால்துறையின் ஊழியர்கள் உட்பட பங்குதாரர்களுடன் ஆலோசனைகள் அல்லது முன்னறிவிப்புகள் ஏதுமின்றி இந்தச் சேவை டிசம்பர் 18, 2024 அன்று அஞ்சல் துறையின் மென்பொருளில் இருந்து திடீரென அகற்றப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுப் புத்தகத் தபால் சேவையின் வாயிலாக புத்தகங்கள், அட்டைகள், பத்திரிகைகள், அனைத்து வகையான வெளியீடுகள், காகிதம், தாள்கள், இரசீதுகள், விலைப்பட்டியல்கள், அறிக்கைகள், வணிக, சட்ட அல்லது தனிப்பட்ட இயல்புடைய எந்தவொரு ஆவணமும் ஒற்றை அல்லது பல பிரதிகளில், நிபந்தனைகளுக்கு உட்பட்டு கணிசமான மலிவான விலையில் தபால் மூலம் அனுப்பப்பட்டது.

இந்தச் சேவையானது புத்தக வெளியீட்டாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நூலகங்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோருக்கு கூரியர் சேவைகளுக்கு மாற்றாக மலிவு விலையில் சேவைகளை வழங்கியது. அத்துடன் மானிய விலைகள் மூலம் வாசிப்பு கலாச்சாரத்தை வளர்க்க உதவியது.

மேலும், இதழ்கள் மற்றும் பருவ இதழ்களுக்கு குறைந்த கட்டணத்தையும் அது வழங்கியது.

இந்தச் சேவையை நிறுத்துவதால் போக்குவரத்துச் செலவுகளை கணிசமாக அதிகரித்துள்ளது. பதிப்புத் துறை, புத்தக கடன் வழங்குபவர்கள், நூலகங்கள், வாசகர்கள் மற்றும் மாணவர்களில் பலரை ஏமாற்றமடையச் செய்துள்ளது. இந்த முடிவு இந்தியாவின் வாசிப்பு கலாச்சாரம் மற்றும் எழுத்தறிவு, கல்வி மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கான அதன் உறுதிப்பாட்டை கடுமையாக அச்சுறுத்துகிறது.

ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களே, இதுபோன்ற முக்கிய சேவைகளை நீக்குவது பொருத்தமானதா? உங்கள் எண்ணங்கள் என்ன? இந்தச் சேவையை மீட்டெடுத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவீர்களா?

புத்தக அஞ்சல் சேவையை நிறுத்துவதற்கான முடிவு எழுத்தறிவு மற்றும் கல்விக்கான நாட்டின் அர்ப்பணிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்தும்.

அறிவைப் பெறுவதற்கான உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும், மேலும் பதிவுப் புத்தகத் தபால் சேவைகள் தகவல்களைப் பரப்புவதை ஊக்குவிப்பதன் மூலம் அதை அணுகுவதற்கு உதவுகின்றன.

இந்தச் சேவையை நிறுத்துவது நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியைத் தடுப்பது மட்டுமல்லாமல், கல்வியறிவு விகிதத்தையும் பாதிக்கும்.

இந்த முடிவு கவலையளிக்கிறது. எனவே பிரதமர் கவனத்திற்குக் கொண்டு சென்று இந்த அத்தியாவசிய சேவையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும்.

பல நூறு கோடி செலவில் சிலைகளுக்கு கணிசமான நிதி ஒதுக்க முடியும் என்றால், அறிவு மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கான அணுகலை வழங்கிடும் அடிப்படை உரிமையை நிலைநிறுத்தும் இது போன்ற சேவைகளை ஏன் ஆதரிக்கக்கூடாது?

இவ்வாறு பி.வில்சன் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்!

### வழக்கறிஞர் கோபிநாத் தலைமையில்

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## டாக்டர் ப.சேகர் – அருள்மொழி சிறப்புரை!

திண்டிவனம், டிச. 31 -

ஜனவரி 18ஆம் தேதி சென்னையில் நடைபெறும் தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என திண்டிவனத்தில் நடைபெற்றவிழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணிஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் தி.மு.க. வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் திண்டிவனத்தில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கோபிநாத் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர்,மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளர் அருள்மொழி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். விழுப்புரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கோபிநாத் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளரும், கழக மூத்த வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர். இதில் ஜனவரி மாதம் 18ஆம் தேதி சென்னையில் நடைபெறும் தி.மு.க. வழக்கறிஞர் அணியின் 3வது மாநில மாநாட்டில் கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

இந்த மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்பதுஉள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக சுனாமி தினத்தை முன்னிட்டு சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டத்தில்தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் அருணகிரி, முத்தவழக்கறிஞர் ஆதித்தியன், வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் நெடுஞ்செழியன், துணைத் தலைவர் கன்னியப்பன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், அய்யனார் ,கமலக்கண்ணன், கிருஷ்ணன், சுதாகர், புஷ்பராஜ், ராஜா, கிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### என்.கௌதமன் தலைமை! இரா.மாரிமுத்து முன்னிலை!

# நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## சூர்யாவெற்றிக்கொண்டான் சிறப்புரை! எம்.ஆர்.செந்தில்குமார், எம்.தினேஷ்குமார் பங்கேற்பு!

நாகை, டிச. 31 -

நாகை மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமை தாங்கினார்.

நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து முன்னிலை வகித்தார்.

தலைமை கழக வழக்கறிஞரும், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளருமான எம்.தினேஷ்குமார் வரவேற்றார்.

கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யாவெற்றி க் கொண்டான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாகூர் நகரக் கழக செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் சிங்காரவேலு, துணைத்தலைவர் மா.மீ.அன்பரசு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் செந்தில், சாபரத்தினம், வினோத், பாஸ்கர், அரசு வழக்கறிஞர் ஆர்.செல்வராஜ், மற்றும் வெங்கடேசன், அழகுராஜா, எ.தேவி, எஸ்.ஆர்.அன்பழகன், சிவகுருநாதன், சதீஷ்பிரபு மற்றும் அரசு வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வரும் 18.12.2025 அன்று சென்னையில் நடைபெறும் வழக்கறிஞர் அணி 3 வது மாநில மாநாட்டில் நாகை மாவட்ட வழக்கறிஞர்கள் பெரும் அளவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என்றும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நாகையில் வழக்கறிஞர் அணி சார்பில் மின்சார வாரியத்தில் பணியாற்றும் மின்சார ஊழியர்களுக்கு மழை அங்கிகளை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், நகரச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி என்ற இலக்கை அடைய நாகை மாவட்ட வழக்கறிஞர்கள் தலைமைக் கழகம், மாநில வழக்கறிஞர் அணி மற்றும் நாகை மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைகளை பெற்று கழகத்துடன் இணைந்து வழக்கறிஞர் அணியினரும் சிறப் பாக பணியாற்றிடுவது என்றும்

நாகை மாவட்டத்தில் உள்ள 3 சட்ட மன்றத் தொகுதியிலும் கழக வழக்கறிஞர்கள் தேர்தல் பணியை சிறப்பாக செய்திடுவது என்றும், உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற செஸ் வீரர் குகேஷ்க்கு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ரூ. 5 கோடி பரிசுத் தொகை வழங்கி சிறப்பான பாராட்டு விழா நடத்திட்ட தமிழ்நாடு முதலவர், தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விராலிமலை கிழக்கு ஒன்றிய பாக நிலை உறுப்பினர்கள் (BLC) ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய செயலாளர் மு.டி.ம.சத்தியசீலன் முன்னிலையில் களமாவூர் அழகு நாச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விராலிமலை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் கழக மருத்துவரணி துணை செயலாளருமான டாக்டர் அஞ்சுகம் பூபதி வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் கழக வெற்றிக்கு பாக நிலை உறுப்பினர்கள் ஆற்றி வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள். நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி தங்கசிங்கம், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் விளாப்பட்டி சிவா, செல்லத்துரை, எஸ்.டி.கண்ணன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், விராலிமலை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் ராஜா ஸ்டாலின் மற்றும் பாக உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பெரிய கடைவீதி பகுதி 1 டவுன் பகுதியில் உள்ள 200 க்கும் மேற்பட்ட பாரதிய ஜனதா கட்சியினர் தெப்பக்குளம் மண்டல் பாரதிய ஜனதா இளைஞரணி தலைவர் என்.விஷ்ணு, மண்டல பாரதிய ஜனதா இளைஞர் அணி செயலாளர் என். நிதீஷ் ஆகியோர் தலைமையில், பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலகி, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாண்புமிகு. வி. செந்தில் பாலாஜி முன்னிலையில், தி.மு.கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் எம்.பி., ஈஸ்வரசாமி எம்பி., பெரியகடை வீதி பகுதி1செயலாளர் மார்க்கெட் எம். மனோகரன், வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் ப.ப.சிவகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.